

Dr.Samuel Joseph, alias Shyam

Music is such an integral part of our lives in India, starting from religious and classical music to moving theme songs and by far the catchiest ad jingles ever. Film musicians and composers have set very high standards for themselves in addition to cultivating a discerning audience; composers have defined particular eras of music by capturing the prevailing mood of society, musicians have brought to our shores, and taken abroad, sounds and techniques that have helped in the evolution of music, while some juggernauts have created tomes working right through the years, defying classification and definition. They have ridden the crest of fame and been instruments of change, but forever in touch with the soul of music. With more than 300 movies to his credit, and having worked with all the big names of the Indian film industry in the last sixty odd years, Dr Samuel Joseph better known as Shyam, has given his heart and soul to music. Today, through a trust called the Christian Cultural Academy that offers both training and performance opportunities to differently-abled artists, he continues his work, quietly and with determination, celebrating the resilience and spirit of Man.

"I have wondered many a times, how I made it here. Despite coming from an orthodox Christian family, and having a father with very conventional beliefs about what is right and what is wrong, what gave me courage to stay rooted to music? How did I overcome all opposition from family, to enter the film industry? I can only say it is Fate", says Dr Samuel Joseph, as he recounts his younger days. His father bought him his first violin, so that young Samuel could accompany his mother who played the organ at church. "Two hours of religious music, for a Sunday congregation, playing alongside my mother, gave me my first platform to perform in front of an audience. It made me disciplined in my approach to music", reveals Shyam sir, "but that is about as far as my parents indulged me. Music showed me the way thereafter, and I went with the flow. I had not been formally trained earlier. So, I took criticism in my chin, and spent many hours honing my craft under Master Dhanraj who laid open for me, a world of musical notations and Western classical compositions. He was a very dedicated teacher and I was hungry for knowledge. Total devotion to my teacher and craft brought me new opportunities." Talking wistfully, and with reverence for his teacher and the techniques he had acquired, Shyam sir offers that, while learning to play music by the ear is useful, youngsters these days should spend time and effort learning musical notations and nuances from a good teacher.

"Having finished school to the satisfaction of my elders, I joined Law School which was regarded as highly respectable", he carries on. "Being a double graduate program, students were considered responsible for themselves, and the Professors would humor us by allowing us to choose our lectures. While this was indeed a progressive thought, a bunch of us buddies used this to "cut" classes and explore other spheres of creativity", exclaims Shyam sir with exuberance. "Stalwarts like MSV were on the lookout for talented musicians and my conscience was drawn to film music which was then boldly flirting with Western music and instruments. I shunted between violin classes and college; rehearsals in the morning, lectures in the afternoon, a quick snack at home and back to rehearsals in the evening. As I was scampering around the house at odd hours, I think my mother had some idea about what I was up to, but if father had known, there would have been trouble for me", says Shyam sir with a mischievous twinkle.

It was around this time that he came into contact with future music directors and legends of Indian music. He was mentored and molded by the likes of M B Sreenivasan and C N Pandurangа Rao, and studied alongside Raaja and R K Shekhar. Shyam sir regards working with MSV the turning point in his life and continues to admire the latter's pursuit of perfection. A challenge to perform solo with Dr Balamuralikrishna required him to learn Carnatic music techniques, which lead him to the home of Late Sri Lalgudi Jayaraman- a memory that Shyam sir holds very close to his heart. He never let an opportunity go by without giving it his very best and tried to meet and learn from masters in every field of music, from Salil Chowdhury to Henry Mancini. Every day was a step closer to the grand plans that Fate had in store for him.

His compassionate and mild nature coupled with dedication to all aspects of the music industry made him popular amongst his peers. Shouldering responsibilities with calm, he strived

Through the Church, he is also involved in rehabilitating social outcasts like children of leprosy patients and ethnic minorities like the nari-kurava community.

to give his co-musicians dignity in an otherwise ruthless industry by playing an active part in bringing improvements to their working conditions. Blessed with childlike enthusiasm to learn, he was every composer's first choice when there was a new challenge. A married man by then, he worked through financial constraints and studied long hours to fulfill his growing aspirations- to rise from artist to assistant composer, and then on to composing on his own. Though Tamil was closest to his heart, he got his biggest breaks in the Malayalam film industry with Kerala State awards for films like Aaroodam and Kanamarayatha. There was no looking back.

Now, retired from mainstream composing for films, he dedicates his time and effort to training and teaching that he would rather call, sharing of knowledge. With a wide exposure to cultures abroad and in India, and with changing times, he now (wishes to contribute to the preservation)sees a need to preserve the rich Indian musical tradition. He notes that over the years, Christian music in India has come to be associated with Western Classical music. Through an initiative called Geethanjali, he seeks to revive the appreciation of Indian Classical music in the Church. Through the Church, he is also involved in rehabilitating social outcasts like children of leprosy patients and ethnic minorities like the nari-kurava community.

"When Fate closes one door, it opens another" - Shyam sir realized this, when he came across visually and physically-challenged persons in the musical field; he observed that, these people had an innate and almost breath-taking flair for music. His wish to give this gift of God a meaning and purpose fructified in the founding of the Christian Cultural Academy. He has been involved with its functioning for the last 27 years; this well trained 53-member choir cum orchestra, with members ranging from 20 to 80 years of age, many physically-challenged, performs annually at different venues in Chennai. The event is his musical offering to the spirit of humankind and it's potential. The proceeds of the event are channelized to support physically and visually challenged people by providing them with tricycles, sewing machines, Braille equipment etc to aid their existence. The Academy stands as his vision and mission for an inclusive society.

Shyam sir is the member of a rare breed of people who are both successful and humane in a cut-throat society. His life is a reminder of what Chennai stands for- a will to succeed in one's chosen profession and a zest for challenge, but always with compassion for the less fortunate. Dr T Samuel Joseph is a Champion all the way. He dedicates his success to his wife and holds her in great regard for all the sacrifices that she had to make, as a wife and mother. "I've had my share of fame and fortune. I am constantly in touch with all my old colleagues. I have a loving family that never begrudged my absence in their growing years. Though retired, my music keeps me relevant, even productive, in terms of my social work. It is a privilege to be occupying this space in time", says Shyam sir with a serenity that comes only from years of hard work and perseverance. "It is like a testimony of my Faith", he declares.



பக்தி இசையில் தொடங்கி. மரபார்ந்த இசையாகட்டும்,விளம்பரங்களில் வரும் பாடல்கள் ஆகட்டும். இசை என்பது நமது வாழ்வில் ஒரு அங்கம்.

திரை இசையமைப்பாளர்கள், தங்களுக்கென ஒரு உயர்ந்த அளவுகோல் வைப்பதோடு மட்டுமல்லாமல். நுட்பவேறுபாட்டறிவுடையவர்களையும் உருவாக்குகிறார்கள். சமுதாயத்தில் அவ்வப்பொழுது நிலவும் மனப்பாங்கை ஒட்டி. அந்தந்த காலகட்டத்திற்கு ஏற்ற இசையை வரையறுத்து. உருவாக்கி. நம் நாட்டிலும் வெளிநாட்டிலும் புதுவிதமான இசையின் ஓசையை பரப்பி இசையின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகுக்கிறார்கள்.

சில இசை ஜாம்பவான்கள், எந்த விதமான வகைப்பாடுகளிலும் சேர்க்க முடியாதபடி பல படைப்புகளை படைத்திருக்கிறார்கள். மாற்றத்தை உருவாக்கி வெற்றியின் முகட்டைத் தொட்டாலும், இசையின் ஆன்மாவுடன் எப்பொழுதும் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள். 60 வருடங்களுக்கும் மேலாக இந்திய திரைப்பட இசை உலகில் பல மேதைகளோடு பணியாற்றி, 300 திரைப்படங்களுக்கும் மேலாக இசையமைத்து. இசைக்காகவே தம்மை அர்ப்பணித்து வரும் ஒருவர் 'ஷ்யாம்' என்று அறியப்படும் டாக்டர்.சாமுவேல் ஜோசஃப் அவர்கள். மனிதனின் தொய்வாற்றலைக் கொண்டாடும் முகமாக, 'கிருத்துவ கலாசார சபை' (Christian Cultural Academy) என்னும் அமைப்பின் மூலம் மாற்றுத்திறன் கொண்டவர்களைப் பயிற்றுவித்து பொது நிகழ்ச்சிகள் வழங்க வைக்கும் அளவிற்கு அவர்களை மிளிரவைக்கும் செயலை அமைதியாக, அதே வேளையில் திடமான நோக்கத்துடன் இவர் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.



''பல சமயங்களில் நான் யோசித்திருக்கிறேன் – நல்லவை எவை, தீயவை எவை என்று பாரம்பரியமான நம்பிக்கைகள் மிகுந்த தந்தைக்கு மரபுவழாத ஒரு கிருத்துவக் குடும்பத்தில் பிறந்தவனாகிய எனக்கு இசையில் மூழ்கி. அதையே திடமாகப் பற்றும் துணிச்சல் எங்கிருந்து வந்தது என்று. குடும்பத்தில் எழுந்த எதிர்ப்புகளை மீறி திரை உலகிற்கு எப்படி வந்தேன்? விதி என்றுதான் கூற வேண்டும்'', என்று தமது இளமைக்காலத்தை அசைபோட்டபடி நம்மிடம் கூறுகிறார் டாக்டர் சாமுவேல் ஜோசஃப்.

''சர்ச்சில், ஆர்கன் (organ) வாசித்து வந்த அன்னையுடன் வயலின் வாசிப்பதற்காக, தந்தைதான் முதல் வயலினை வாங்கித்தந்தார். இரண்டு மணி நேரம் பிரார்த்தனைத் திருக்கூட்டத்தில் பார்வையாளர்கள் முன்னிலையில், அதுவும் எனது தாயுடன் சேர்ந்து வாசித்தது எனக்கு முதல் நடைமேடை ஆனது. நான் இசையை அணுகும் முறையை இந்த அனுபவம் ஒழுங்குபடுத்தியது.''

''ஆனால். எனது பெற்றோர்கள் என்னை ஈடுபடுத்தியது இந்த அளவு மட்டும்தான். இதற்குப்பிறகு இசையே எனக்கு வழிகாட்டியது; அதன் ஓட்டத்தில் நானும் அதைப் பின்பற்றினேன். மரபுவழி இசையில் சம்பிரதாய பயிற்சி இல்லாமல் இருந்ததால், விமர்சனங்களையும்,கண்டனங்களையும் நான் பொருட்படுத்தாமல். தன்ராஜ் ஆசானிடம் ஒரு நாளில் பல மணிநேரம் செலவழித்து எனது திறனை வளர்த்துக் கொண்டேன். மேற்கத்திய இசையின் பல இணைப்பாக்கங்களையும். உருப்படிகளையும், ஸ்வரக்கோர்வைகளையும் எனக்குத் திறந்து காட்டினார் அந்த மாபெரும் இசை ஆசான். அவர், தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த ஒரு ஆசிரியர். நான், அறிவுப்பசி மிகுந்தவன். அவர்மீதும், எனது திறமை மீதும் நான் வைத்த ஆர்வப்பற்று எனக்குப் புதிய வாய்ப்புகளைத் தேடித் தந்தது.''

மிகுந்த சிரத்தையுடனும். அதே சமயத்தில் தன் ஆசிரியர், அவர் கற்றுக்கொடுத்த இசையுத்திகளின் மீதுள்ள மரியாதையுடனும் ஷியாம் அவர்கள், 'கேள்வி ஞானத்தினால் இசைக்கருவிகள் வாசிக்கலாம் என்றாலும். தற்கால இளைஞர்கள் தகுந்த ஒரு ஆசிரியரை அணுகி, இசை நுட்பங்களையும், ஸ்வரக்கோர்வைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் சிறந்த முறை' என்கிறார்.

''பள்ளிப்படிப்பு முடித்தவுடன். மிகுந்த மரியாதையுடன் பார்க்கப்பட்ட சட்டப்படிப்பு படிக்க நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன். இரண்டு இளநிலைப் பட்டப்படிப்பு என்பதால் நாங்கள் மிகவும் பொறுப்புணர்ச்சி மிகுந்தவர்களாகக் கருதப்பட்டோம்; எந்தப் பாடத்தின் விரிவுரை எப்பொழுது என்று தெரிவு செய்யும் பொறுப்பு எங்களிடமே விடப்பட்டது. இது ஒரு முற்போக்கான சிந்தனையாக இருந்தாலும், எனக்கும், சில நண்பர்களுக்கும். (வகுப்புகளை சில வேளைகளில் 'வெட்டி விட்டு') படைப்பாற்றல் நிறைந்த களங்களுக்குச் செல்லும் ஆய்வுப்பயணம் மேற்கொள்ள இது உதவியது, என்று ஒருவிதமான உணர்ச்சிப்பொங்கலுடன் திரு.ஷியாம் கூறுகிறார்.

திரு. எம்.எஸ்.வி. போன்ற மேதைகள். திறமைவாய்ந்த இசைக்கலைஞர்களைத் தேடிக் கொண்டிருந்த இந்த சமயத்தில், எனது மனமும் மேற்கத்திய இசையோடும் வாத்தியக்கருவிகளோடும் சாகசம் செய்துகொண்டிருக்கும் திரை இசையை நாடியது. ஒருபக்கம் வயலின் பயிற்சி; இன்னொரு பக்கம் கல்லூரி; காலையில் திரையிசைப் பாடல்களுக்கான ஒத்திகை; பகலில் கல்லூரியில் விரிவுரைகள்: வீட்டிற்கு வந்து சிற்றுண்டி, தொடர்ந்து மாலையில் ஒத்திகை. வேளை கெட்ட வேளைகளில் வீட்டில் காணப்பட்டதால், எனது தாயாருக்கு அரசல் புரசலாக ஏதோ புலப்பட்டிருக்கலாம். ஆனால். எனது தந்தை வரை அது எட்டியிருந்தால், நிலைமை விபரீதமாய் இருந்திருக்கும்'' என்று கண்களில் குறும்பு மிக திரு. ஷியாம் கூறுகிறார்.

இந்த தருணத்தில்தான் வருங்காலத்தில் இசையமைப்பாளர்களாக மிளிரப்போகும் சிலருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. எம்.பி. ஸ்ரீனிவாசன், சி.என். பாண்டுரங்க ராவ் போன்றவர்களால் இவர் செதுக்கப்பட்டார். இளையராஜா. ஆர்.கே.சேகர் ஆகியோருடன் சேர்ந்து படித்தார்.

எம்.எஸ்.வி. அவர்களுடன் வேலை செய்ய நேர்ந்ததை திரு. ஷியாம் ஒரு திருப்புமுனையாகக் கருதுகிறார். பூரணத்துவத்தை என்றும் நாடும் அந்த மேதையை இன்றும் வியந்து பாராட்டுகிறார். டாக்டர் பாலமுரளிகிருஷ்ணாவுடன் தனி வயலின் வாசிக்கும் சவால்கள் நிறைந்த வாய்ப்பு ஒருமுறை வந்த பொழுது. கர்னாடக இசையின் நுணுக்கங்களைக் கற்பதற்காக, திரு. லால்குடி ஜெயராமனை அணுகிய நாளை இன்றும் மிகவும் இனிமையான ஒரு நினைவாக இவர் வைத்திருக்கிறார். எந்த ஒரு வாய்ப்பினையும் நழுவ விடாமல் முழுமூச்சுடன் இறங்கி தன்னால் எந்த அளவு சிறப்பாக செய்ய முடியுமோ அந்த அளவு செய்து, சலீல் சவுத்ரி முதல் ஹென்றி மென்ஸி வரை எல்லோரிடமும் கற்று, விதி இவருக்கு வகுத்த மாபெரும் திட்டத்தை நோக்கி ஒவ்வொரு நாளும் முன்னேறினார்.

கருணை நிறைந்த மென்மையான இவரது பண்பும். இசை தொடர்பான அனைத்து விஷயங்களிலும் ஆழ்ந்து ஈடுபாட்டுடன் இவர் செயலாற்றிய விதமும், நண்பர்களிடையே இவரை பிரபலமாக்கியது. கருணையற்ற தொழில்துறையில், சக இசைக்கலைஞர்களுக்கு மரியாதை கிடைப்பதற்காகவும், அவர்கள் வேலை செய்யும் இடத்தில் நல்ல சூழல் நிலவுவதற்காகவும் அமைதியுடன் போராடினார். கற்றுக்கொள்வதில். ஒரு குழந்தையைப் போன்ற ஆர்வம் காட்டுபவராதலால், சவால்கள் மிகுந்த பாடல்களினால், இசையமைப்பாளர்களின் முதல் தேர்வு திரு.ஷியாம் அவர்கள்தான்.

குடும்பத்தலைவராகவும் ஆகிவிட்ட நிலையில் பணக் கட்டுப்பாடுகளையும் தாண்டி. பல மணி நேரங்கள் இசை நுணுக்கங்கள் பற்றி படித்து, படிப்படியாக இசைக்கலைஞர், துணை இசையமைப்பாளர். இசையமைப்பாளர் என்று முன்னேறினார்.

தமிழ், இவரது மனதிற்கு மிகவும் நெருக்கமாக இருந்தபோதிலும், மலையாளத்தில் நிறைய வாய்ப்புகள் வந்தன.கேரள அரசின் விருதுகளும் 'ஆருடம்'. 'கானமறியாத்த' போன்ற திரைப்படங்களுக்குக் கிடைத்தன. இதன் பிறகு வெற்றிப்பாதையிலிருந்து இவர் திரும்பிப் பார்க்கவில்லை.

திரையிசையமைப்பிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும். இசை கற்பிப்பதிலும், பலரைப் பயிற்றுவிப்பதிலும் இப்பொழுது முழுக் கவனமும் செலுத்துகிறார். 'பயிற்றுவிப்பது' என்பதைவிட 'அறிவுப் பரிமாற்றம்' என்று கூறுவதையே இவர் விரும்புகிறார். இந்திய பாரம்பரிய இசையைப் பேணிக்காக்கும் அவசியத்தைக் கூறுகிறார். பலப்பல காலங்களாக கிருத்துவ பக்திப் பாடல் இசை மேற்கத்திய சாஸ்திரிய இசையுடனே சம்பந்தப்படுத்தப்படுவதை சுட்டிக் காட்டும் இவர், 'கீதாஞ்சலி' என்னும் அமைப்பின் மூலம் இந்திய பாரம்பரிய இசையை சர்ச்சுகளில் ரசிக்கும்படி செய்கிறார். மேலும், சர்ச்சுகளின் மூலமாக சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட தொழுநோய் நோயாளிகளின் குழந்தைகள். நரிக்குறவர்கள் போன்றவர்களின் மறுவாழ்விற்கு உதவுகிறார்.

''விதி ஒரு கதவை மூடினால், இன்னொரு கதவைத் திறக்கும்'' – இசைத்துறையில் பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்களைப் பார்த்தபொழுது

மேலும், சர்ச்சுகளின் மூலமாக சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட தொழுநோய் நோயாளிகளின் குழந்தைகள், நரிக்குறவர்கள் போன்றவர்களின் மறுவாழ்விற்கு உதவுகிறார்.



திரு. ஷியாம் அவர்கள் இதனை நன்கு உணர்ந்தார். இசையின்மேல் உள்ளியல்பான நாட்டம் இவர்களிடம் இருந்ததைக் கண்ட திரு. ஷியாம், கடவுள் தந்த இந்தப் பரிசிற்கு ஒரு செயல்நோக்கம் காண விழைந்தார். அதன் விளைவே ‘கிருத்துவ கலாசார அமைப்பு’. கடந்த 27 ஆண்டுகளாக இதன் செயல்பாட்டில் இவர் ஈடுபட்டிருக்கிறார். 50 பேர் கொண்ட - 20 வயது முதல் 30 வயது வரை இருக்கும் – இந்தப் பாடல் மற்றும் வாத்தியக்குழு சென்னையில் பல இடங்களில் வருடத்திற்கு ஒருமுறை கச்சேரிகளை நடத்துகிறது. பெரும்பாலும் மாற்றுத்திறன் கொண்டவர்களே இருக்கும் இந்தக் குழு நடத்தும் நிகழ்ச்சிகள் மனித நேயத்திற்கும், மனித ஆற்றலுக்குப் அர்ப்பணிப்பாக இருக்கின்றன.

இதன்மூலம் கிடைக்கும் வருமானம், உடல் ஊனமுற்ற, பார்வையற்ற மக்களுக்கு வேண்டிய பொருட்களான மூன்று சக்கர ஊர்தி, ப்ரெய்ல் சாதனம், தையல் மிஷின் முதலானவைகள் வாங்கித் தருவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. உள்ளடக்கிய சமுதாயம் என்னும் அவரது குறிக்கோளுக்கு சான்றாக திகழ்கிறது இந்த அமைப்பு .

போட்டிகள் நிரம்பிய இந்த உலகில், வெற்றியும் பெற்று, மனித நேயத்துடனும் விளங்கும் திரு. ஷியாம் போன்றவர்களைக் காண்பது சிறிது அரிதான ஒரு விஷயம். செய்யும் தொழிலில் வெற்றிபெறும் அவா, சவால்களை சந்திப்பதில் உணர்ச்சிமிகு ஆவல், பின்னடைந்தவர்களின் மீது கருணை-திரு. ஷியாமின் வாழ்க்கை: இதுவே சென்னை மாநகரத்தின் அடையாளமும் கூட. தலைசிறந்த முதன்மை சான்ற வெற்றிவீராகிய டாக்டர் சாமுவெல் ஜோசஃப், பல தியாகங்களை தனது வாழ்க்கையில் செய்த தனது மனைவிக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறார்.

''எனக்குக் கிடைக்கவேண்டிய பேரும் புகழும் கிடைத்திருக்கிறது. என்னுடைய பழைய நண்பர்களுடன் இன்றும் தொடர்பு வைத்திருக்கிறேன். வளரும் பருவத்தில் நிறைய நேரங்களில் நான் சேர்ந்து இல்லாததைப் பொருட்படுத்தாத மிக நல்ல குடும்பம் எனது குடும்பம். ஓய்வு பெற்றுவிட்டாலும், இசை என்னை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி, எனது சமூகப்பணிகளுக்கு ஆக்க வளமாக இருக்கிறது. இந்த சமயத்தில் இந்த வெளியில் இருப்பது ஒருவித பெருமை'', பலவருட அனுபவம், உழைப்பு இதன்மூலமே கிடைக்கப்பெறும் ஒரு அமைதியுடன் அவர் கூறுகிறார்.

''அவன் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஒரு சான்று!''